## கோவை மெடிக்கல் சென்டரில்

# ஆஸ்துமாவுக்கு சிறப்பு சிகிச்சை



கோவை, ஜூன் 1: கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை நுரையீரல் சிகிச்சை நிபுணர் டாக்டர் பட்டாபிராமன் கூறியதாவது:

மனிதன் சுவாசிப்பதற்கான முக்கிய உறுப்பு நுரையீரல். நாம் சுவாசிக்கும் ஆக்சிஜன், நுரையீரல் மூலமாக உடலில் உள்ள அனைத்து உறுப்பிற்கும் கொண்டு செல்கிறது. காற்றை உள்ளே செலுத்தும் போது, சுற்றுப்புற சூழலால் மாசுபட்ட காற்று மற்றும் புகையானது நுரையீரலை நேரடியாக பாதிக்கும். இது போன்ற காரணத்தால் நுரையீரலில் ஏற்படும் அலர்ஜியால் ஆஸ்துமா உண்டாகிறது. புகை பிடிக்கும் போது ஏற்படும் நச்சுதன்மையும் நுரையீரலில் பாதிப்பை உண்டாக்கும். இதனால், மூச்சுக்குழாய் சுருங்கி விடும். இதை சிஓபிடி என்று கூறுகிறோம். மேலும், புகை பழக்கத்தால், நுரையீரல் புற்றுநோய் வரலாம்.

இருமல், சளி, சளியுடன் ரத்தம் வருதல், மூச்சு திணறல் போன்ற அறிகுறி இருந்தால் உடனடியாக நுரையீரல் நோய் சிகிச்சை நிபுணரை சந்தித்து ஆலோசனை பெற வேண்டும்.

நுரையீரல் நோயினை ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் எளிதில் குணப்படுத்தலாம். ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருவருக்கு ஆஸ்துமா பாதிப்பு இருக்கிறதா? என்பதை கண்டறிய நுரையீரல் செயல் திறன் டெஸ்ட் எடுக்கப்படுகிறது. ஈபஸ் என்ற நுரையீரல் உள் நோக்கி கருவியின் மூலம் நுரையீரலில் புற்றுநோய் பாதிப்பு குறித்து கண்டுபிடிக்க முடியும். இச்சிகிச்சை முறை தென் ஆசியாவிலேயே கோவை மெடிக்கல் சென்டரில் தான் உள்ளது. நுரை யீரல் புற்றுநோய் ஆரம்ப அறிகுறியை கண்டறிய நவீன கருவியை நுரையீரல் மூச்சுக்குழாய் வழியாக செலுத்தி ஸ்கேன் செய்யப்படுகிறது. நுரையீரலை சுற்றி நீர் இருந்தால் அதை வெளியே எடுக்க சிகிச்சை அளிக்கப்படும். நீர் திரும்பவும் வராமல் இருக்க புளூரோஸ்கோபி என்ற கருவி மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஆஸ்துமாவால் பாதிக்கப்படும் நோயாளிக்கு இன்கேலர் முறைப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது. இன்கேலர் சிகிச்சை பெறும் ஆஸ்துமா நோயாளிகள் வாழ்க்கை முறையில் மாற்றம் செய்ய வேண்டும். முன்பெல்லாம் நுரையீரல் நோயால் பாதித்தவர்களுக்கு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அதி நவீன மருத்துவ கருவிகள் வந்துவிட்டதால், அதன் மூலம் நோயினை கண்டறிந்து குணப்படுத்துவதால் அறுவை சிகிச்சை தவிர்க்கப்படுகிறது.

ஆஸ்துமா நோயால் எந்த விதத்திலும் உயிருக்கு ஆபத்து ஏற்படாது. ஆனால் வாழ்க்கை தரம் பாதிக்கும். பெற்றோருக்கு ஆஸ்துமா இருந்தால் குழந்தைகளுக்கும் வர வாய்ப்புள்ளது. சுற்றுப்புற சூழல் மாசுபடுவதால் தான் ஆஸ்துமா ஏற்படுகிறது. வாகன புகை, தொழி ற்சாலை, பஞ்சாலை கழிவால் காற்று மாசுபடுதல் முக்கிய காரணமாகும். கிராமப்புறங்களை விட நகர்ப்புறத்தை சேர்ந்தவர்கள் இந்நோய்க்கு அதிகம் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இந்தியாவில் 2 முதல் 15 சதவீதம் பேர் ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோவை, பெங்களூர் போன்ற நகரத்திலும் ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் உள்ளனர். இரு சக்கர வாகனத்தில் செல்வோர் மூச்சுசுவாசம் கொண்ட தலைக்கவசத்தை அணிந்து சென்றால் நச்சுப்புகை பாதிப்பில் இருந்து விடுபடலாம். இவ்வாறு டாக்டர் பட்டாபிராமன் கூறினார்.